செ.வெ.எண்-31 நாள்-18.08.2021

**அகரமுதலி இயக்ககத்தின் தூய தமிழ்ப்பற்றாளர் பரிசு**

**விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

**கடைசி நாள் ஆகத்து** 31, 2021

நடைமுறையில் மக்களிடம் பேச்சு வழக்கிலும், அனைத்து இடங்களிலும் பிற மொழிக்கலப்பில்லாமல் எங்கும் எதிலும் தூய தமிழைப்பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வழியாகப் பரிசுத்திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் உலகம் முழுவதிலிருந்தும் 3 தூய தமிழ்ப்பற்றாளர்களைத் தெரிவு செய்து அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொருவருக்கும் தலா உரூபா 5000/- (உரூபா ஐந்தாயிரம் மட்டும்) பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது.

பரிசுத் தொகையைப் பெறுவதற்கு விருப்பமுள்ள தூய தமிழ்ப்பற்றாளர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தைச் சொற்குவை.காம் (www.sorkuvai.com) என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்து **patralarparisu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது அஞ்சல் வழியாகவோ "**இயக்குநர், செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி.நகர், சென்னை - 600 028**" என்ற முகவரிக்கு 31.08.2021 **ஆம் நாள் மாலை 5.00 மணிக்குள்** கிடைப்பது போல் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலும், விண்ணப்பிப்பவரின் தூயதமிழ்ப்பற்றை உறுதிசெய்து வழங்கும் நற்சான்றிதழ்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். அத்துடன் நற்சான்று அளிக்கும் தமிழறிஞர்களின் ஒருபக்க அளவிலான வாழ்க்கைக் குறிப்புகளையும் (Bio-data) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு அகவைவரம்போ, கல்வித்தகுதியோ கிடையாது. யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு:** உரிய சான்றுகளுடன் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.